**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 158/2019</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | வாசுதேவன் | P.W.2. Cross |
| த/பெ. | : | நாகராஜன் | |
| தேதி | : | 05.02.2026 | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> –**

வாதிகள் இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் நிலத்தை மாற்றி பதிவு செய்துள்ளதாக கோரி தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் புல எண் தெரியாது. அதன் விஸ்தீரணம் நஞ்சையில் 10 ஏக்கரும், புஞ்சையில் 6 ஏக்கரும் இருக்கும். அனைத்து சொத்துக்களும் ஒரே நான்கெல்லையின் தான் உள்ளது. அதன் நான்கெல்லைகள் தெற்கில் ஓடக்கரை என்கிற வாய்க்கால், கிழக்கில் ஐயனார் கோவில், மேற்கில் பாபு என்பவரது வயலும், வடக்கில் பிடாரி கோவில் ஆகும். தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. கிரயம் ஆவணங்கள் எத்தனை ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் வாதியின் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான்.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**